**பன்னிரண்டாம் வகுப்பு 2021 – 2022**

**கூடுதல் ஒரு மதிப்பெண் வினாக்கள்**

**இயல் – 1**

**செய்யுள் : இளந்தமிழே**

1 . இளந்தமிழே என்ற கவிதை நூலின் ஆசிரியர் யார் ? -

**சிற்பி பாலசுப்பிரமணியம்**

2 . இளந்தமிழே என்ற நூல் எந்த கவிதை தொகுப்பில் இடம்பெற்றுள்ளது ? -

**நிலவுப்பூ**

3. சிற்பி பாலசுப்பிரமணியம் எந்த பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார் ? -

**பாரதியார் பல்கலைக்கழகம்**

4. சிற்பி எந்த நூலிற்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றார் ? -

**ஒரு கிராமத்து நதி**

5 . சிற்பி எத்துறைத் தலைவராக பணியாற்றினார் ? - **தமிழ்த்துறை**

6 . சிற்பி எத்தனை முறை சாகித்ய அகாதெமி விருது பெற்றுள்ளார் ? **- 2 முறை**

7 . மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் யார் ? - **சூரியன்**

8 . முத்துமுத்தாய் வியர்வை வெள்ளம் யாருக்கு வந்தது ? **தொழிலாளி**

9 . மூண்டுவரும் கவிதை வெறிக்கு உணவாய் இருந்தது எது ? **முத்தமிழ்**

10 . வியர்வை வெள்ளம் – இலக்கணக் குறிப்பு யாது ? – **உருவகம்**

11 . சிற்பி எங்கே செயற்குழு உறுப்பினராக பணியாற்றினார் ? -**சாகித்ய அகாதெமி**

**உரைநடை தமிழ்மொழியின் நடை அழகியல்**

1 . பா வகைகள் நான்கு என்று சொன்ன நூல் ? – **தொல்காப்பியம்**

2 . கவிதையின் இயங்காற்றல் தான் - **நடை**

3 . ‘கடந்தடு தானை ‘எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது - ?

**தொல்காப்பியம்**

**சு . விவேக் M.A., M.Phil., B.Ed., முதுகலைத் தமிழாசிரியர் contact : 7904144418**

4 . காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் காணப்படும் நூல் எது ? - **முல்லைக்கலி**

5 . ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர் சொல்லி அழைத்தவர் யார் ?

- **கி. ராஜநாராயணன்**

6 . ஆடுகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் காணப்படும் நூல் எது ? - **கிடை**

7 . ஆடுகளில் பெயர்களை வகைப்படுத்தும் கி. ராஜநாராயணன் எழுதிய நூல் எது ?

- **கிடை**

8 . தொகைமொழி என்பது **செறிவாக்கப்பட்ட** வடிவமைப்பு.

9 . தமிழ்மொழி நடை அழகியல் என்ற கட்டுரைத் தொகுப்பு எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது ? - **தமிழ் அழகியல்**

10 . தமிழ்மொழி நடை அழகியல் கட்டுரைத் தொகுப்பின் ஆசிரியர் யார் ? -

**தி . சு . நடராசன்**

11 . திறனாய்வுக் கவலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் யார் ? - **தி . சு . நடராசன்**

12 . தி . சு . நடராசன் பணியாற்றிய வார்சா பல்கலைக்கழகம் எந்நாட்டில் உள்ளது ?

- **போலந்து**

13 . அகன் ஐந்திணைகளை பேசும் இலக்கண நூல் எது ? **தொல்காப்பியம்**

14 . போலந்து நாட்டில் உள்ள பல்கலைக்கழகத்தின் பெயர் என்ன ? - **வார்சா**

15 . பேரெயின் முறுவலார் யாருடைய இறுதிச்சடங்கு பாடலை பாடினார் ?

**நம்பி நெடுஞ்செழியன்**

16 . தொடியுடைய தோள் மணந்தனன் - என்று பேரெயின் முறுவலார் யாரை குறிப்பிடுகிறார் ? - **நம்பி நெடுஞ்செழியன்**

17 . அழகின் சிரிப்பு - யாருடைய நூல் ? - **பாரதிதாசன்**

18 . நடை பற்றி குறிப்பிடும் இலக்கண நூல் எது ? - **தொல்காப்பியம்**

**சு . விவேக் M.A., M.Phil., B.Ed., முதுகலைத் தமிழாசிரியர் , contact : 7904144418**

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**செய்யுள் தன்னேர் இலாத தமிழ்**

1 . தன்னேர் இலாத தமிழ் என்ற செய்யுள் பாடல் எந்நூலில் உள்ளது ? -

**தண்டியலங்காரம்**

2 . வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது எது ? - **தமிழ்**

3 . ஓங்கலிடை பாடலில் வரும் பா வகை என்ன - ? **நேரிசை வெண்பா**

4 . அணியிலக்கனத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் எத்தனை? - **3**

5 . அணியிலக்கனத்தையும் கூறும் இலக்கண நூல்கள் எத்தனை ? - **5**

6 . ஓங்கலிடை பாடலில் பயின்று வரும் அணி என்ன?**பொருள்வேற்றமை அணி**

7 . தண்டியலங்காரம் **அணி** இலக்கணத்தை கூறும் சிறப்பான நூல்களுள் ஒன்று.

8 . தன்னேர் இலாத தமிழ் பாடலின் ஆசிரியர் யார் ? **தண்டி**

9 . தண்டியலங்காரம் எந்த வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்டது?

**காவியதர்சம்**

10 . தண்டி எந்த நூற்றாண்டைச் சார்ந்தவர் ? - **கி . பி . 12**

11 . தண்டியலங்காரம் எத்தனை பிரிவுகளை உடையது ? **3**

12 . தண்டியலங்கார பிரிவுகளின் வரிசை முறைகள் முறையே

**பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல்**

**விரவானம் தம்பி நெல்லையப்பருக்கு**

1 . பாரதியார் புதுச்சேரியில் இருந்து யாருக்கு கடிதம் எழுதினார் ? **நெல்லையப்பர்**

2 . ஆணும் பெண்ணும் ஒருயிரின் **இரண்டு** தலைகள் என்கிறார் பாரதி.

3 . பெண்ணை அடைத்தவன் கண்ணை **அடைத்தான்** என்கிறார் பாரதி.

4 . எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாற்றை பற்றிக் கூறும் நூல் எது ?

**வம்சமணி தீபிகை**

5 . எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாற்றை நூலாக எழுதியவர் யார் ?

**கவிகேசரி சாமி தீட்சிதர்**

6 . வம்சமணி தீபிகை எந்த ஆண்டு வெளியிடப்பட்டது ? - **1879**

Padasalai.Org

7 . எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாற்றை திருத்தி எழுதுவதற்காக பாரதி யாருக்கு கடிதம் எழுதினார் ? - **வெங்கடேசுவர எட்டையப்பர்**

8 . வம்சமணி தீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக வெளியிட்டவர் யார் ?

**இளசை மணி**

9 . நெல்லையப்பர் துணையாசிரியராக பணியாற்றிய இதழ் எது ?

**சூரியோதயம், கர்மயோகி**

10 . நெல்லையப்பர் துணையாசிரியராக மற்றும் ஆசிரியராக பணியாற்றிய இதழ்

**லோகோபகாரி, தேசபக்தன்**

11 . நெல்லையப்பர் யாருடைய வரலாற்றை எழுதியுள்ளார் ? -

**வ. உ. சிதம்பரனார்**

12 . பாரதியாரின் கடிதங்களை தொகுத்தவர் யார் ? - **ரா . அ . பத்மநாபன்**

13 . பாரதி இறுதியாக யாருக்கு கடிதம் எழுதினார் ? - **குத்திகேசவர்**

14 . பாரதியை விட நெல்லையப்பர் எத்தனை ஆண்டுகள் இளையவர் ? - **7**

Padasalai.Org

**<u>இனிக்கும் இலக்கணம்</u>** **<u>தமிழாய் எழுதுவோம்</u>**

1 . எல்லா இடங்களிலும் **பேச்சுத்** தமிழை எழுத முடியாது.

2 . எந்த மெய்கள் ஈரொற்றாய் வராது ? - **வல்லின மெய்கள்**

3 . தமிழில் சொல்லின் தொடக்கமாக எந்த எழுத்துகள் வருவதில்லை ? -

**மெய்யெழுத்துகள்**

4 . எந்த மெய்யோடு சொல் முடியாது ? - **வல்லின மெய்**

5 . ஆய்த எழுத்து எங்கு வரும் ? - **சொல்லின் இடையே**

6 . மெல்லின எழுத்துகளில் முதலில் வராத எழுத்து எது ? - **ண, ன**

7 . ஈரொற்றாய் வரும் எழுத்துகள் யாவை ? - **ய , ர , ழ**

8 . மயங்கொலி எழுத்துகள் யாவை ? - **ண, ன, ந, ற, ர, ல, ள, ழ**

**சு . விவேக்** M.A., M.Phil., B.Ed., **முதுகலைத் தமிழாசிரியர்** contact : 7904144418

**சான்றோர் சித்திரம்** **ஆறுமுக நாவலர்**

1 . வசனநடை கைவந்த வல்லாளர் எனப் புகழப்பட்டவர் யார் ? -

**ஆறுமுக நாவலர்**

2 . ஆறுமுக நாவலருக்கு திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய பட்டம் யாது ?

**நாவலர்**

3 . ஆறுமுக நாவலர் பிறந்த ஊர் எது ? - **யாழ்ப்பாணம் நல்லூர்**

4 . நாவலர் எந்த நூல்களை வசனமாக மாற்றி அமைத்தார் ? **புராண நூல்கள்**

தயாரிப்பு :

**சு . விவேக்**

**முதுகலைத் தமிழாசிரியர்**

**Contact : 7904144418**

**Mail Id : vivekvicky20688@gmail.com**

**What's app : 9942183143**

Padasalai.Org